முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை: **திருமதி.K.அறிவொளி,** M.A., M.L.,

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04-ம் நாள் வியாழக்கிழமை

**I.A.No.1/2025 in G.W.O.P.No.71/2024**

* * * * *

சதீஸ்குமார் . . . மனுதாரர்

/ எதிர் /

உமாமகேஸ்வரி . . . எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 20.11.2025-ம் தேதி என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.அமலாவிஜி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மோகனசுந்தரம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று நீதிமன்றம் வழங்கும் . . .

உ த் த ர வு-

மனுதாரர் அபிடவிட்டில் சொல்லப்பட்டுள்ள காரணங்களை ஏற்று அசல் மனு முடியும் வரை மனுதாரர் குழந்தையை வாரம் ஒரு முறை ஒரு பொது இடத்தில் சந்தித்து பேசுவதற்கு ஏதுவாக பார்வையிட அனுமதி வழங்கக் கேட்டு காப்பாளர் மற்றும் குழந்தைகள் சட்டம், 1890 பிரிவு 12-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.12.04 16:55:44 +0530

04.12.2025 முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

2) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த அக்டோபர் 2016-ல் சிவன்கோவிலிலும், கடந்த 05.06.2017-ம் தேதியன்று கிறிஸ்தவ பதிவாளர் புதுக்கோட்டை முன்பு திருமணம் நடைபெற்றது என்றும், மேற்படி திருமணத்தின் பயனாக கடந்த 12.03.2018-ல் ஜான்வி ஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்தது என்றும், தங்களுக்குள் கருத்து வேறுபாடு காரணமாக தானும் தூத்துக்குடி குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, அதுவும் *O.S.No.*11/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், எதிர்மனுதாரர் காரைக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதுவும் *D.V.C.No*.2/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், தானும் மேற்படி இளவர்.குழந்தை ஜான்வி ஸ்ரீ-க்கு சட்டப்படியான பாதுகாவலர் என விளம்புகை செய்யக் கோரி மனு செய்து நிலுவையில் உள்ளது என்றும், தனது மகள் தற்பொழுது எதிர்மனுதாரர் வசம் வளர்ந்து வருகிறார் என்றும், தான் தன் மகளை பார்த்து சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது என்றும், எதிர்மனுதாரர் தன் மகளை தன் Custody-யில் இருந்து பிரித்து தன் பாதுகாப்பில் வைத்துள்ளார் என்றும், தான் தன் இளவர் மகளை வாரம் ஒரு முறையாவது ஒரு பொது இடத்தில் பார்க்க வேண்டியுள்ளதாகவும், எனவே அசல் மனு முடியும் வரை மனுதாரர் குழந்தையை வாரம் ஒரு முறை ஒரு பொது இடத்தில் சந்தித்து பேசுவதற்கு ஏதுவாக பார்வையிட அனுமதி வழங்கக் கேட்டு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.12.04 16:55:59 +0530

04.12.2025

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் உரையின் சுருக்கம்:-**

எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் 2015-ல் திருமணம் நடந்தது என்பதையும், தங்கள் இருவருக்கும் இடையே இருந்த திருமண உறவில் 12.03.2018-ல் ஜான்வி ஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது என்பதும், தங்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக மனுதாரர் தன் மீது தூத்துக்குடி குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து O.S.No.11/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்பதும், தான் மனுதாரரை எதிர்மனுதாரராக கண்டு காரைக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதுவும; D.V.C.No.2/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்பது மட்டும் உண்மை என்றும், அது தவிர மனுதாரர் அசல் மனுவில் கூறியிருக்கும் அனைத்து சங்கதிகளும் உண்மைக்கு புறம்பாகவும், உண்மை நிலையை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தனது மகள் இளவர்.ஜான்வி ஸ்ரீ பிறந்த தேதி முதல் நாளது தேதி வரை இளவர் குழந்தையிடம் மனுதாரர் அன்பாக பேசியதோ பழகியதோ கிடையாது என்றும், இளவர் குழந்தைக்கு ஸ்வீட்ஸ் போன்ற திண்பண்டங்களோ, விளையாட்டு சாமான்களோ கொடுத்து இளவர் குழந்தையிடம் பாசமும், பரிவும் காட்டியது கிடையாது என்றும், இளவர் ஜான்வி ஸ்ரீ எந்த பள்ளியில் படிக்கிறார், அவருக்கு மாத பள்ளிக் கட்டணம் எவ்வளவு, பஸ் கட்டணம் எவ்வளவு என்பது கூட மனுதாரருக்கு தெரியாது என்றும், மனுதாரர் இளவர் குழந்தையின் Future welfare-ல் எந்த அக்கறையும் காட்டியது கிடையாது என்றும், இளவர் குழந்தையின் எதிர்காலத்தில் மனுதாரருக்கு அக்கறை இருந்திருக்குமேயானால் வங்கியில் பணியாற்றும்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.12.04 16:56:06 +0530

04.12.2025 முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

மனுதாரர் இது வரை இளவர் பெயரில் எந்த சேமிப்பும் செய்தது கிடையாது என்றும், இளவர் ஜான்வி ஸ்ரீ மனுதாரரை பார்த்தாலே அஞ்சி நடுங்கி வந்துள்ளார் என்றும், மனுதாரர் இம்மனு தாக்கல் செய்த பிறகு கூட இளவர் ஜான்வி ஸ்ரீ-யை நீதிமன்றத்திற்கு அழைத்து வரச் செய்து மனுதாரருடன் நீதிமன்ற செரஸ்தார் அவர்கள் அறையில் வைத்து தனியாக இளவர் குழந்தையை பேச அனுமதித்த போது கூட மனுதாரரை பார்த்தவுடன் இளவர்.ஜான்வி ஸ்ரீ அஞ்சி நடுங்கி மனுதாரரின் முகத்தைக் கூட இளவர் பார்க்க விரும்பாது அழுது தன் கால்களை வந்து கட்டிக் கொண்டு விட்டார் என்றும், ஒரு மணி நேரமாக இளவர் குழந்தையை பலரும் சமாதானம் செய்தும் கூட மனுதாரருடன் இளவர் குழந்தை ஒரு வார்த்தை கூட பேச மறுத்து விட்டார் என்றும், அந்த நிகழ்ச்சியிலிருந்து இளவர் குழந்தை மனதளவில் பாதிக்கப்பட்டு காய்ச்சல் மற்றும் உடல்நலக்குறைவு ஏற்பட்டு 15 நாட்களுக்கு மேலாக மருத்துவ சிகிச்சை செய்தும், இளவர் குழந்தையின் நடுக்கம் இன்னும் குறைந்தபாடு இல்லை என்றும், மேலும் இளவர் குழந்தை இரவு நேரத்தில் தன்னுடன் உறங்கும் போதும் கூட அலறியடித்து எழுந்து தன்னை கட்டிப் பிடித்துக் கொண்டு தன்னை அப்பா அடிக்க வருகிறார் என்று அடிக்கடி புலம்பி வருகிறார் என்றும், இதனால் இளவர் குழந்தையின் படிப்பும் பாழாகிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும், மனுதாரர் இளவர் குழந்தைக்கு இழைத்த *torture* மற்றும் கொடுமைகளை மறைத்து அனுதாபத்தை பெற வேண்டுமென்ற ஒரே எண்ணத்தில் இளவர் குழந்தை மீது மனுதாரருக்கு பாசம் இருப்பது போல நாடகமாடி இம்மனுவை vexatious-ஆக தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்யக் கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.12.04 16:56:16 +0530

04.12.2025

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

4) இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

தீர்வு:-

5) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் அக்டோபர் 2016-ல் சிவன்கோவிளிலும், கடந்த 05.06.2017-ம் தேதியன்று கிறிஸ்தவ பதிவாளர் புதுக்கோட்டை முன்பு திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமணத்தின் பயனாக கடந்த 12.03.2018-ல் ஜான்வி ஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்ததாகவும், தங்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தானும் தூத்துக்குடி குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து O.S.No.11/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாகவும், எதிர்மனுதாரர் காரைக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதுவும் D.V.C.No.2/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாகவும், தானும் மேற்படி இளவர்.குழந்தை ஜான்வி ஸ்ரீ-க்கு சட்டப்படியான பாதுகாவலர் என விளம்புகை செய்யக் கோரி மனு செய்து நிலுவையில் உள்ளதாகவும், தனது மகள் தற்பொழுது எதிர்மனுதாரர் வசம் வளர்ந்து வருவதாகவும், தன் மகளை பார்த்து சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது என்றும், எனவே தற்போது தனது இளவர் பெண் குழந்தையை மனுதாரர் வாரத்தில் ஒரு நாள் பார்வையிட வேண்டுமென்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் மனுவில் கோரியுள்ள சங்கதிகளை மறுத்துரைக்கும் விதத்தில் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் எதிர்மனுதாரருக்கும்,

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.12.04 16:56:25 +0530

04.12.2025 முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

மனுதாரருக்கும் 2015-ல் திருமணம் நடந்தது என்பதும், தங்கள் இருவருக்கும் இடையே இருந்த திருமண உறவில் 12.03.2018-ல் ஜான்வி ஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது என்பதும், தங்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக மனுதாரர் தன் மீது தூத்துக்குடி குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து O.S.No.11/2023-ம், தான் மனுதாரரை எதிர்மனுதாரராக கண்டு காரைக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதுவும் D.V.C.No.2/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்பது மட்டும் உண்மை என்றும், தவிர இம்மனு தாக்கல் செய்த பின்பு இளவர் ஜான்வி ஸ்ரீ-யை நீதிமன்றத்திற்கு அழைத்து வரச் செய்து மனுதாரருடன் நீதிமன்ற செரஸ்தார் அவர்கள் அறையில் வைத்து தனியாக இளவர் குழந்தையை பேச அனுமதித்த போது கூட மனுதாரரை பார்த்தவுடன் இளவர். ஜான்வி ஸ்ரீ அஞ்சி நடுங்கி மனுதாரரின் முகத்தைக் கூட இளவர் பார்க்க விரும்பாது அழுது தன் கால்களை வந்து கட்டிக் கொண்டு விட்டார் என்றும், ஒரு மணி நேரமாக இளவர் குழந்தையை பலரும் சமாதானம் செய்தும் கூட மனுதாரருடன் இளவர் குழந்தை ஒரு வார்த்தை கூட பேச மறுத்து விட்டார் என்றும், அந்த நிகழ்ச்சியிலிருந்து இளவர் குழந்தை மனதளவில் பாதிக்கப்பட்டு காய்ச்சல் மற்றும் உடல்நலக்குறைவு ஏற்பட்டு 15 நாட்களுக்கு மேலாக மருத்துவ சிகிச்சை செய்தும், இளவர் குழந்தையின் நடுக்கம் இன்னும் குறைந்தபாடு இல்லை என்றும் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

**6)** இந்நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் P.Kalenthirababu Vs K.Madhanapriya (2025-4 L.W.13) CRP.PD.No.1405/2025,

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.12.04 16:56:37 +0530

dated:28.07.2025 என்ற வழக்கில்

'Constitution of India, Article 227, Visitation rights of father, Application seeking visitation rights-Welfare of the minor prime concern of the Court – minor is aged 10 years and is studying in standard 5.

Time alone would be the healer – **child cannot be deprived of the love of the father, irrespective of whatever disputes are going on between the father and the mother.**

Father should be permitted to visit his minor son, twice a month, on the second and fourth sundays between 10 a.m., and 12.00p.m.," என்று தீர்ப்பளித்துள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டுள்ளது.

**7)** இருப்பினும் மனுதாரர் இளவர் குழந்தையின் தந்தை என்பதாலும், இளவர் குழந்தையின் இயற்கை காப்பாளர் என்பதாலும், மேற்படி இளவர் குழந்தையை பார்ப்பதற்கான உரிமை மேற்படி மனுதாரருக்கு உண்டு என இந்நீதிமன்றம் கருதி இம்மனுவை அனுமதிப்பதே மனு பொருண்மைகளின்பேரிலும், நீதியின்பாலும் சரியாக இருக்குமென இந்நீதிமன்றம் தீர்மானித்து அவ்வாறே இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

***முடிவாக,*** இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்/தந்தை தனது இளவர் குழந்தை ஜான்வி ஸ்ரீ-யை அசல் மனு முடியும் வரை ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையில் காலை 09.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் உதவியுடன், எதிர்மனுதாரருக்கு முறையான அறிவிப்பு கொடுத்துவிட்டு, மேற்படி இளவர் குழந்தையை எதிர்மனுதாரர் அல்லது அவரது பெற்றோர்கள் உதவியுடன் ஏதாவதொரு பொதுவான இடத்தில் வைத்து பார்க்க

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.12.04 16:56:45 +0530

04.12.2025

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

வேண்டுமென்றும், மேற்படி குறிப்பிட்டுள்ள கால அளவில் மட்டும்தான் இளவர் குழந்தையுடன் மனுதாரர் இருக்க வேண்டுமென்றும், மேலும் இளவர் குழந்தைக்கு உடல் அளவிலும், மனதளவிலும் எவ்வித துன்புறுத்தலுமின்றி இளவர் குழந்தையின் நலனை மனதில் கொண்டு அவரை கையாள வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.12.04 16:56:51 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.12.04 16:57:03 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
சிவகங்கை.
I.A.No.1/2025 in
G.W.O.P.No.71/2024
சீரான / வரைவு / உத்தரவு
நாள்: 04.12.2025

04.12.2025 முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.